RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-5 | இதழ்- 198 | ஜூலை.24 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5







# “வினாத்தாள் கசிவு விவகாரத்தில் விரைவு நீதிமன்றங்கள் மூலம் நீதி” : மவுனம் கலைத்த பிரதமர் மோடி உறுதி

புதுடெல்லி: ஜூலை.24-

வினாத்தாள் கசிவு விவகாரத்தில் மவுனம் கலைத்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு, தவறிழைத்தவர்கள் நிச்சயம் கடும் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்று உறுதியளித்துள்ளார்.

நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்தில் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தி, டெல்லி ஜந்தர் மந்தரில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த இயக்கத்தினர் கடந்த ஜூலை 20ம் தேதி நாடாளுமன்றம் நோக்கி பேரணியை மேற்கொள்ள முயன்றபோது அதை தடுத்த நிறுத்துகையில் போலீஸார் போராட்டக்காரர்கள் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.

அப்போது போலீஸார் போராட்டக்காரர்களை தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டு வீசியும் கலைத்தனர். தடியடியின்போது போராட்டக்காரர்களை தலையில் தாக்கியதாகவும், ஆணியுடன் கூடிய லத்தி, கற்களை பயன்படுத்தியதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் கூறினர். இது தொடர்பாக டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

இந்நிலையில், வினாத்தாள் கசிவு விவகாரத்தில் மவுனம் கலைத்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு, தவறிழைத்தவர்கள் நிச்சயம் கடும் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்று உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில்,



“நமது இளைஞர்களின் நலனும் எதிர்காலமும் தான் எதையும் விட முக்கியமானது. வினாத் தாள்கள் கசிவில் ஈடுபடுபவர்களுக்கு விரைவான மற்றும் கடுமையான தண்டனை வழங்கும் வகையில், விரைவு நீதிமன்றங்களை அமைக்க நாம் முடிவு செய்துள்ளோம். இது தொடர்பான அனைத்து தேவையான நடவடிக்கைகளையும் எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இது மாணவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான நமது தொடர் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகும். நமது இளைஞர்களின் எதிர்காலத்திற்கு தீங்கு விளைவிக்க முயற்சிக்கும் எவரும் தப்பிக்க முடியாது.” என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக நேற்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, “கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 152 வினாத்தாள் கசிவு சம்பவங்கள் நடந்துள்ளன. ஆனால் எந்த ஒரு குற்றவாளியும் நடவடிக்கைக்கு உள்ளாகவில்லை.” என்று குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், நேற்று (ஜூலை 23) பிரதமர் மோடி விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று கூறியிருக்கிறார்.

டெல்லி ஜந்தர் மந்தரில் திரளும் இளைஞர்கள் அனைவரும் மத்தியில் ஆளும் பாஜக மீது கடும் அதிருப்தியை வெளிப்படுத்திவரும் சூழலில், இளைஞர்கள் கொந்தளிப்பை குறைக்கும் வகையில் பிரதமரின் இந்த அறிவிப்பு அமைந்துள்ளதாக கூறப்படுகிறது.

‘பதவி விலக வேண்டும்’

ஆனால், பிரதமரின் ட்வீட்டுக்கு பதிலளித்துள்ள சிஜேபி, “தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும்” என்று ஒற்றை வரியில் பதிலளித்து தங்களின் போராட்டம் தொடரும் என்பதை தெளிவுபடுத்தியுள்ளனர்.

மேலும், டெல்லியில் இன்று 16 மெட்ரோ ரயில் நிலையங்கள் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், “மோடி மொத்த டெல்லியையும் முடக்கத் தயாராக இருக்கிறார். ஆனால் தர்மேந்திர பிரதானை பதவிநீக்கம் செய்யத் தயாராக இல்லை” என்று சிஜேபி இயக்கத் தலைவர் அபிஜித் தீப்கே தெரிவித்துள்ளார்.

ராகுல் காந்தி எதிர்வினை:

இந்நிலையில், பிரதமரின் வாக்குறுதிக்கு எதிர்வினையாற்றியுள்ளார் ராகுல் காந்தி. இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில், “நமது இளைஞர்களின் எதிர்காலத்திற்கு மிகப்பெரிய தீங்கு விளைவித்தது நீங்கள்தான். நமது கல்வி முறையை முழுமையாக கைப்பற்றவும், அழிக்கவும் நீங்கள் அனுமதித்தீர்கள், ஊக்குவித்தீர்கள் மேலும் அதற்கு பொறுப்பான ஒவ்வொருவரையும் நீங்கள் பாதுகாத்தீர்கள்.மாணவர்களின் கோரிக்கைகள் தெளிவானவை:

1. தர்மேந்திர பிரதானை பதவி நீக்கம் செய்யுங்கள்.

2. மாணவர்களிடம் மன்னிப்பு கேளுங்கள்.

3. மாணவர்களை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவும் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

# “மாணவர்களை தூண்டிவிட்டு அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிறது காங்கிரஸ்”

## டிடிவி தினகரன் சாடல்

சென்னை, ஜூலை.24-

“தனது கடந்த கால தவறுகளை மூடி மறைத்து, மாணவர்களின் எதிர்கால நலன் எனும் முகமுடியை அணிந்து கொண்டு, காங்கிரஸ் முன்னெடுக்கும் போராட்டம், அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியே” என்று அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் குற்றம்சாட்டியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், “நீட் தேர்வு என்ற சொல்லையே நாட்டிற்கு அறிமுகப்படுத்திய காங்கிரஸ் இன்று அதை எதிர்த்து போராடுவது அரசியல் கேலிக்கூத்து. தமிழகத்தில் அனுமதியின்றி மாணவர்கள் போராடினால் அடக்கு முறை, அதுவே டெல்லியில் அனுமதியின்றி போராடிய ராகுல் காந்தி கைது செய்தால் அது ஜனநாயகப் படுகொலையா ?

2010ம் ஆண்டு, மத்தியில் ஆட்சியில் இருந்தபோது மருத்துவப் படிப்புகளுக்கு தேசிய அளவிலான நுழைவுத் தேர்வு என்ற கருத்தை உருவாக்கி, நீட் தேர்விற்கு அடித்தளத்தை அமைத்துக் கொடுத்த காங்கிரஸ் கட்சி, இன்று அதே நீட் தேர்வுக்கு எதிராக தெருக்களில் இறங்கிப் போராடுவது மாணவ, மாணவியர்களின் உணர்வுகளை அரசியல் ஆயுதமாக பயன்படுத்தும் கீழ்த்தரமான செயலாகவே பார்க்க வேண்டியுள்ளது.

நீட் தேர்வை எதிர்த்து தற்போது போலிப் போராட்டம் நடத்தும் காங்கிரஸ், 2010ம் ஆண்டு தான் ஆட்சியில் இருந்த போது நீட் தேர்வு அறிமுகப்படுத்த முயன்றது தவறு என்பதை தற்போதாவது ஒப்புக் கொள்கிறதா? அல்லது அப்போது எடுத்த முடிவு சரி என்றால் தற்போதைய போராட்டங்கள் அரசியல் காரணங்களுக்காகவா ? என்பதை நாட்டு மக்களுக்கு முதலில் விளக்க வேண்டும்.

தமிழகத்தில் நீட் தேர்வுக்கு எதிராக சாலைகளில் இறங்கி போராடிய மாணவர்கள் மீது காவல்துறையை ஏவி, வலுக் கட்டாயமாக கைது செய்து விட்டு, பொதுமக்களுக்கு எத்தகைய சிரமத்தையும் ஏற்படுத்தாமல், முறையாக முன் அனுமதி பெற்று அதற்குரிய இடத்தில் அமைதியாக போராடலாம் என அதிகாரத் தொணியில் பதிலளிக்கும் தவெக அரசு, டெல்லியில் பிரதமர் மோடியின் இல்லம் முன்பாக எவ்வித அனுமதியும் பெறாமல் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலையில் போராட்டம் நடத்திய ராகுல் காந்தி கைது செய்திருப்பது ஜனநாயகப் படுகொலை என கூறுவது முன்னுக்கு பின் முரணாக தெரியவில்லையா ?

தனது கடந்த கால தவறுகளையும், முடிவுகளையும் மூடி மறைத்து, மாணவ, மாணவியர்களின் எதிர்கால நலன் எனும் முகமுடியை அணிந்து கொண்டு காங்கிரஸ் கட்சியினர் முன்னெடுக்கும் இப்போராட்டம், மாணவ, மாணவியர்களை தூண்டிவிட்டு அதன் மூலம் அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியே தவிர, மாணவ, மாணவியர்களின் நலனை காக்கும் போராட்டம் அல்ல என்பதை நாட்டு மக்கள் அனைவரும் நன்கு அறிவர் என்பதை இந்நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.” என்று டிடிவி தினகரன் கூறியுள்ளார்.

# ஆளுநர் மாளிகை முற்றுகை: மாதர் அமைப்பினர் கைது

சென்னை, ஜூலை.24-

மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் மசோதாவில் தொகுதி மறுவரையறை, மக்கள் தொகை கணக்கெடுப்பு போன்ற நிபந்தனைகளைச் சேர்க்காமல் நடப்பு நாடாளுமன்ற கூட்டத் தொடரிலேயே சட்டமாக்கி அமல்படுத்தக் கோரி, மகளிர் இட ஒதுக்கீட்டுக்கான தேசிய பெண்கள் கூட்டமைப்பு மற்றும் அனைத்து பெண்கள் கூட்டமைப்பு சார்பில், ஆளுநர் மாளிகை முற்றுகையிடும் போராட்டம் நேற்று நடைபெற்றது.

அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க அகில இந்திய துணைத் தலைவர் உ.வாசுகி தலைமையில், 300க்கும் மேற்பட்ட பெண்கள் சின்னமலையில் இருந்து ஆளுநர் மாளிகையை முற்றுகையிட ஊர்வலமாக புறப்பட்டுச் சென்றனர்.

ஆனால், தடையை மீறி அவர்கள் செல்ல முற்பட்டதால் போலீஸார் அவர்களை கைது செய்தனர்.

இதில் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஜி.பிரமிளா, இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநிலத் தலைவர் மஞ்சுளா, தேசியச் செயலாளர் ஏ.ஆர்.சாந்தி, அகில இந்திய முற்போக்கு பெண்கள் சங்கத்தின் தலைவர் பங்கேற்றனர்.

# கழிவுநீரை மறுசுழற்சி செய்யும் ‘நீர் எழில் பள்ளி’ திட்டம் ; எழும்பூர் அரசுப் பள்ளியில் அமைச்சர் தொடங்கி வைத்தார்

சென்னை, ஜூலை.24-

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் தண்ணீரை மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்தும் விதமாக கழிவுநீர் மூலமாக தோட்டம் உருவாக்குவது மற்றும் நிலத்தடி நீரை உயரச் செய்வது உள்ளிட்ட வழிமுறைகளுடன் கூடிய `நீர் எழில் பள்ளி' எனும் திட்டம் தனியார் நிதியுதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பள்ளிகளில் தினமும் சுமார் 25,000 லிட்டர் கழிவுநீர் பாதுகாப்பாக சுத்திகரிக்கப்பட்டு மறுபயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். முதல்கட்டமாக சென்னை எழும்பூர், அசோக் நகர், போரூர், அம்பத்தூர், வில்லிவாக்கத்தில் உள்ள 5 அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.




அதன்படி சென்னை எழும்பூரில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் `நீர் எழில் பள்ளி' திட்டத்தை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ் மோகன் நேற்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வின் போது பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன், தொடக்கக்கல்வித் துறை இயக்குநர் பூ.ஆ.நரேஷ் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அதன்பின்னர் அமைச்சர் ராஜ் மோகன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: நீட் தேர்வில் மறுசீரமைப்பு வேண்டாம். நிரந்தரமாக ரத்து செய்யப்பட வேண்டும் என்பதுதான் தவெகவின் இலக்கு.

நீட் தேர்வுக்கு எதிராக அறவழியில் போராடும் மாணவர்களுக்கு நாங்கள் ஆதரவு கொடுக்கிறோம். சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு நிரந்தரத் தீர்வு காண முயன்று வருகிறோம்.

அதேநேரம் சாலைகள் போராடுவதற்கான இடமல்ல. ஜனநாயக முறைப்படி அனுமதி பெற்று போராட்டம் நடத்தினால் ஆதரிக்கிறோம்.

நீட் தேர்வுக்கு எதிராக உரிய அனுமதி பெற்று மாணவர்கள் அறவழியில் போராடினால் பிரச்சினை இல்லை. சாதாரண மக்களுக்கு இடையூறு செய்யும் விதமாக போராட்டம் நடத்தப்பட்டதால்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

டெல்லியில் ஜனநாயக முறைப்படி போராடும் இடத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆனால் தமிழகத்தில் அனுமதி பெறாமல் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் போராட்டம் நடத்தப்பட்டதால் கைது நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

# தூத்துக்குடியில் அதிர்ச்சி: விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்ட இளைஞர் உயிரிழப்பு

தூத்துக்குடி, ஜூலை.24-

போலீஸ் விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்ட இளைஞர் உயிரிழந்த சம்பவம் தூத்துக்குடியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் அமுதா நகர் பகுதியைச் சேர்ந்தவர் நாகராஜன். இவரது மகன் அருணாச்சலம் (26). இவர் தூத்துக்குடி 3ஆம் மைல் பகுதியில் உள்ள ஒரு டாஸ்மாக் பாரில் வேலை செய்து வந்துள்ளார்.

இதனிடையே, டாஸ்மாக் கடை மூடிய பிறகு, சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்ததாக அருணாச்சலத்தை கடந்த ஜூலை 17ஆம் தேதி தென்பாகம் போலீசார் கைது செய்து, அவரிடம் இருந்து 120 மது பாட்டிகளையும் பறிமுதல் செய்தனர்.

தொடர்ந்து, அவரை விசாரணைக்காக தென்பாகம் காவல் நிலையத்திற்கு போலீசார் அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு அவர் மயங்கி விழுந்ததாக கூறப்படுகிறது. இதை பார்த்த போலீசார், உடனடியாக அருணாச்சலத்தின் தாயார் பரமேஸ்வரிக்கு போலீசார் தகவல் தெரிவித்தனர்.

மேலும், அருணாச்சலத்தை தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் போலீசார் சிகிச்சைக்காக அனுமதித்தனர். மருத்துவமனையில் அவருக்கு தலையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி (ஜூலை 23) காலை அருணாச் சலம் பரிதாபமாக உயிரிழந்தார். போலீசார் தாக்கியதாலேயே தனது மகன் உயிரிழந்ததாக அருணச்சலத்தின் பெற்றோர் குற்றம்சாட்டி, உடலை வாங்க மறுத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் அருணாச்சலத்தின் தாயார் பரமேஸ்வரி கூறுகையில், “ என் மகனை விசாரணைக்காக காவல்நிலையத்திற்கு அழைத்து வந்ததாக தெரிவித்தனர். அப்போது அவர் கீழே விழுந்து அடிப்பட்டதாக கூறி மருத்துவ மனையில் சேர்த்தனர்.

ஆனால், மருத்துவ மனையில் எனது மகனை நான் பார்த்த போது, 4 போலீஸ்காரர்கள் அடித்ததாக அவன் கூறினான். போலீசார் தாக்கியதாலேயே என் மகன் இறந்திருக்கிறான். அவருக்கு எந்த நோயும் கிடையாது.

இதுகுறித்து போலீ சாரிடம் கேட்டால், சிசிடிவி காட்சிகளை காட்டுவதாக கூறுகிறார்கள். ஒருவரை அடிக்க வேண்டும் என்றால், சிசிடிவி முன்பு வைத்தா அடிப்பார்கள்? என் மகனின் இறப்பிற்கு நீதி வேண்டும். அவனை தாக்கிய போலீசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்” எனக் கேட்டுக்கொண்டார்.

மேலும் இதுகுறித்து அருணாச்சலத்தில் உறவினர் ராஜேஸ்வரி கூறுகையில், “விசாரணை என்ற பெயரில் போலீசார் அருணாச்சலத்தை அடித்துள்ளனர். இதுகுறித்து போலீசாரிடம் கேட்டால், அனைத்து தரவுகளும், சிசிடிவி காட்சிகளும் இருக்கிறது என சொல்கிறார்கள். ஆனால், தற்போது வரை எங்களிடம் எதையும் காட்டவில்லை. அருணாச்சலம் இறப்பிற்கு நியாயம் வேண்டும்” என வலியுறுத்தினார்.

போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்களுடன் தூத்துக்குடி டவுன் டிஎஸ்பி சுனில் தலைமையிலான காவல்துறையினர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், இதுகுறித்து தூத்துக்கடி டவுன் டிஎஸ்பி சுனில் கூறும்போது, “விசாரணையின் போது திடீரென அருணாச்சலம் மயங்கி விழுந்திருக்கிறார். உடனே உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்னர் பெற்றோர்கள் மற்றும் காவலர்கள் உதவியுடன் அருணாச்சலத்தை தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம்.

அங்கும் அவர் மயங்கி விழுந்தார். அவரை போலீசார் அடிக்கவில்லை. இது லாக்கப் மரணம் கிடையாது” என விளக்கமளித்தார்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தக்காளி விலை கடும் வீழ்ச்சி: விவசாயிகள் கவலை- கிலோ ரூ.10க்கு விற்பனை





கிருஷ்ணகிரி, ஜூலை.24-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தக்காளி வரத்து அதிகரித்துள்ளதால் அதன் விலை கடுமையாக சரிந்துள்ளது. இதன் காரணமாக சாகுபடிக்காக அதிக முதலீடு செய்த விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்து வருவதாக வேதனை தெரிவித்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தின் சூளகிரி, ராயக்கோட்டை, கெலமங்கலம், தேன்கனிக் கோட்டை, பேரிகை உள்ளிட்ட பகுதிகளில் தக்காளி சாகுபடி பரவலாக நடைபெற்று வருகிறது. எல்நினோ பருவநிலை மாற்றத்தால் நீர் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்ற தகவலையடுத்து, குறுகிய காலத்தில் மகசூல் தரும் பயிராக கருதி ஏராளமான விவசாயிகள் தக்காளி சாகுபடியில் ஈடுபட்டனர். எதிர்பார்த்ததை விட போதிய நீர் கிடைத்ததால் தக்காளி செடிகள் நன்றாக வளர்ந்து, தற்போது அதிகளவில் விளைச்சல் கிடைத்து வருகிறது.இந்த நிலையில், சூளகிரி மற்றும் ராயக்கோட்டை மார்க்கெட்டுகளுக்கு ஒரே நேரத்தில் அதிக அளவில் தக்காளி வரத்து ஏற்பட்டதால் விலை கடுமையாக சரிந்துள்ளது. தற்போது ஒரு கிலோ தக்காளி ரூ.10க்கும், 25 கிலோ கொண்ட ஒரு கிரேட் ரூ.200க்கும் விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர். சில்லறை விற்பனையாளர்கள் பொதுமக்களை கவரும் வகையில் "5 கிலோ ரூ.50" என்ற விலையில் தெருவோரங்களில் விற்பனை செய்து வருகின்றனர்.தக்காளி சாகுபடிக்காக விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்து, நீர்ப்பாசனம், கூலி தொழிலாளர்கள் உள்ளிட்ட செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், தற்போது கிடைக்கும் விலை உற்பத்திச் செலவைக் கூட ஈடுகட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் பலருக்கு கடும் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

அதே நேரத்தில் தக்காளி விலை குறைந்துள்ளதால் இல்லத்தரசிகள் 5 கிலோ, 10 கிலோ என ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர். இதனால் நுகர்வோர் மகிழ்ச்சியடைந்தாலும், விவசாயிகள் கடும் நெருக்கடியில் சிக்கியுள்ளனர். எனவே, வேளாண்துறை அதிகாரிகள் சூளகிரி, தேன்கனிக்கோட்டை, பேரிகை, கெலமங்கலம், ராயக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள விவசாயத் தோட்டங்களில் நேரில் கள ஆய்வு மேற்கொண்டு, சந்தை நிலவரத்துக்கு ஏற்ப மாற்றுப் பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும். மேலும், விலை சரிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நிவாரண நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# தாராபுரத்தில் 'ஜனநாயகன்' திரைப்பட வெளியீடு: ரசிகர்கள் கோலாகல கொண்டாட்டம்

தாராபுரம், ஜூலை.24-

தாராபுரம் திருப்பூர் மாவட்டம்: தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் நடித்த 'ஜனநாயகன்' திரைப்படம் இன்று உலகம் முழுவதும் வெளியாகியதை முன்னிட்டு, தாராபுரத்தில் ரசிகர்கள் உற்சாகமாக கொண்டாடினர்.தாராபுரம் முன்னாள் நகர மன்ற துணைத் தலைவர் கே.எஸ். கோவிந்தராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த கொண்டாட்டத்தில், பொதுமக்கள் மற்றும் ரசிகர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டதுடன், பட்டாசுகள் வெடித்து மகிழ்ச்சி வெளிப்படுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் மாவட்ட இணைச் செயலாளர் ஷேக் பரீத்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சத்தியபாமா, நகரச் செயலாளர்கள் கதிர், அபுதாஹிர், முன்னாள் நகரத் தலைவர் எஸ்.ஜாபர் சாதிக், கழக நிர்வாகிகள் ஆட்டோ முஜி, பாவா, நல்லசாமி, தில்லைமுத்து, கார்த்தி, நவநீதன் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகளும் ரசிகர்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் நடித்த இறுதித் திரைப்படம் என்ற சிறப்புமிக்க இடத்தைப் பெற்றுள்ள 'ஜனநாயகன்' திரைப்படத்தின் வெளியீட்டை முன்னிட்டு, தாராபுரத் தில் நடைபெற்ற இந்த உற்சாகமான கொண்டாட்டம் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.



# ஊத்துக்கோட்டை பேரூராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கான அரசுசேவை நலதிட்ட முகாம்

திருவள்ளூர், ஜூலை.24-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சி டாக்டர் அம்பேத்கர் நகர் சமுதாய கூடத்தில் தமிழ்நாடு அரசு பேரூராட்சி இயக்குநரகம் ஊத்தூக்கோட்டை தேர்வு நிலை பேரூராட்சி தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டு திட்டம் (SWDS)கீழ் தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கான அரசுசேவை நலதிட்ட முகாம் போரூராட்சிசெயல் அலுவலர் கோ.சதீஷ் தலைமையில் நடைபெற்றது இம்முகாமுக்கு சிறப்பு அழைப்பாளராக குட்முடிபூண்டி சட்டமன்ற உறுப்பினர் விஜயகுமார் கலந்துகொண்டு முகாமை துவக்கி வைத்து தூய்மை பணியாளர்களுக்கான அரசு திட்டங்கள் குறித்து உரையாற்றினார் இம்முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டு அரசு நல திட்டங்களுக்கு இணையதளம் மூலம் விண்ணப்பிதனர் 10க்கும் மேற்பட்ட அரசுதுறை அலுவலர்கள் கலந்துகொண்டு தூய்மை பணியாளர்களின்ஸீ விண்ணப்பங்களை பதிவுசெய்தனர்

# தேனி மாவட்டம்அனுமந்தன்பட்டி, க.புதுப்பட்டி பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டு ஆய்வு




கம்பம், ஜூலை.24-

தேனி மாவட்டம். அனுமந்தன்பட்டி மற்றும் க.புதுப்பட்டி பேரூராட்சிகளில் பேரூராட்சிகள் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்தஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் , அனுமந்தன்பட்டி பேரூராட்சியில் நகர்ப்புற வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் 1800 மீட்டர் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருவதை பார்வையிட்டதுடன், பணிகளின் தன்மை குறித்துக் கேட்டறிந்து பணிகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடித்திட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து, க.புதுப்பட்டி பேரூராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கூடுதல் மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டு வருவதைப் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், பணிகள் நடைபெறும்பொழுது பொறியாளர்கள் அவ்வப்போது ஆய்வு செய்து பணிகளை உரிய காலத்திற்குள் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். பின்னர், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று, உள்நோயாளிகள் பிரிவு, வெளிநோயாளிகள் பிரிவு பகுதிகளில் சிகிச்சைப் பெற்று வருபவர்களின் பதிவேடுகளை ஆய்வு செய்ததுடன் மருந்தகம், இசிஜி பிரிவு, எக்ஸ்ரே பிரிவு உள்ளிட்ட ஆய்வகங்களை பார்வையிட்டு, பொதுமக்களுக்கு தேவையான சிகிச்சைகளை வழங்கி நல்ல முறையில் கண்காணித்திட வேண்டும் என மருத்துவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். பின்னர் க.புதுப்பட்டி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்கு அம்ருத் திட்டத்தின் கீழ் ரூ.17.61 கோடி மதிப்பீட்டில் 2.5 விலிஜி நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருவதைப் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார், அதனைத்தொடர்ந்து க.புதுப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சென்று மாணவர்களை சந்தித்து கல்வித்திறன் குறித்து ஆய்வு செய்ததுடன், அங்குள்ள அங்கன்வாடி மையத்தினை பார்வையிட்டு ஆய்வுசெய்து குழந்தைகளுக்கு வழங்கப்படும் மதிய உணவை பார்வையிட்டு, உணவினை ருசித்து பார்த்ததுடன் குழந்தைகளுக்கு சுகாதாரமான முறையில் சத்தான உணவுகள் வழங்கி நன்றாக பராமரித்திட வேண்டும் என பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன். அறிவுறுத்தினார். இந்த ஆய்வில் உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) .வில்லியம் ஜேசுதாஸ், பேரூராட்சிகள் செயற்பொறியாளர் அம்சா, க.புதுப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் மரு.வின்செண்ட், செயல் அலுவலர்கள். மணிகண்டன் (அனுமந்தன்பட்டி), .கணேசன் (கபுதுப்பட்டி), இளநிலைப் பொறியாளர்கள் .மாணிக்கம், ,மாணிக்கவாசகம் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# ராகுல்காந்தியை கண்டித்து சென்னையில் பாஜகவினர் ஆர்ப்பாட்டம்



சென்னை, ஜூலை.24-

ராகுல்காந்தியை கண்டித்து சென்னையில் பாஜகவினர் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கரப்பான்பூச்சி கட்சியினரின் போராட்டம் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. நீட் தேர்வு சுமூகமாக நடந்து முடிந்து ரிசல்ட் வெளிவந்துள்ள நிலையில் மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஏன் பதவி விலக வேண்டும்?. மாணவர்கள் போராட்டத்தில் காங்கிரஸின் ராகுல்காந்திக்கு என்ன சம்பந்தம் என்றும் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பியிருந்தார். இந்த நிலையில் ராகுல்காந்தியை கண்டித்து தமிழக காங்கிரஸ் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவோம் என்று நயினார் நாகேந்திரன் அறிவித்து இருந்தார். அதன்படி இன்று காலை சென்னை அண்ணா சாலையில் உள்ள தாராப்பூர் டவர்ஸ் அருகில் பாஜக சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தலைமை தாங்கினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் துணை தலைவர்கள் வி.பி.துரைசாமி, டால்பின்ஸ்ரீதர், மாநில செயலாளர் வினோஜ் பி.செல்வம், கராத்தே தியாகராஜன், எஸ்.சதீஷ்குமார், ஜான் பீட்டர் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் கண்டிக்கிறோம், கண்டிக்கிறோம் சுயநல அரசியல் செய்யும் காங்கிரஸ் கட்சியை கண்டிக்கிறோம்.பிரதமர் இல்லத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் செய்ய முயன்ற காங்கிரஸ் கட்சியை கண்டிக்கிறோம். தேசத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் காங்கிரஸ் கட்சியை கண்டிக்கிறோம் என்று கோஷங்களை எழுப்பினர். பாஜகவினர் காங்கிரஸ் அலுவலகத்தை முற்றுகையிடுவதை தவிர்க்கும் வகையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்தை சுற்றி போலீசார் பேரிகார்டுகளை போட்டு தடுப்புகளை ஏற்படுத்தியிருந்தனர். இதனால், அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது

# காசோலை மோசடி வழக்கில் நடிகர் விமலுக்கு ஓராண்டு சிறை தண்டனை விதித்து சென்னை நீதிமன்றம் தீர்ப்பு!

சென்னை, ஜூலை.24-



காசோலை மோசடி வழக்கில் நடிகர் விமலுக்கு ஓராண்டு சிறை தண்டனை விதித்து சென்னை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. விமல் தயாரித்து நடித்த மன்னர் வகையறா படம் 5 ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்தது. இந்தப் படத்தை தயாரிக்க நடிகர் விமல், பைனாஸ்சியர் கோபி என்பவரிடமிருந்து ரூ. 4.5 கோடி கடனாகப் பெற்றுள்ளார். படம் வெளியான பின்னரும் அந்தத் தொகையை அவர் வழங்கவில்லை. பின்னர், அந்த தொகையை விமல் காசோலையாக வழங்கியுள்ளார்.

அந்த காசோலையை கோபி வங்கியில் செலுத்தியபோது, விமல் வங்கிக் கணக்கில் பணம் இல்லை என்று திரும்பி வந்தது. இதையடுத்து ரூ. 4.5 கோடி செக் மோசடி வழக்கை நடிகர் விமல் மீது தயாரிப்பாளர் கோபி சென்னையில் உள்ள 11வது சிறு வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றத்தில் தொடர்ந்தார். இந்த வழக்கு விசாரணைக்காக நடிகர் விமல் ஏற்கெனவே நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தார். அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஆர்த்தி இன்று தீர்ப்பு அளித்தார். அதில், விமலுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, அவருக்கு ஓராண்டு சிறைத் தண்டனைய விதிக்கிறேன். வாங்கிய செக் தொகையை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இந்த தீர்ப்பை வழங்கும்போது நடிகர் விமல் தரப்பில், மேல்முறையீடு செய்ய உள்ளதாகவும், அதுவரை தண்டனையை நிறுத்தி வைக்கக் கோரி மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, தண்டனையை நிறுத்தி வைத்து உத்தரவிட்டார்.

# பெருங்களத்தூர் மற்றும் பீர்க்கன்காரணை பகுதிகளில், பொதுமக்கள் மற்றும் குடியிருப்பு நல சங்கத்தினர் தாம்பரம் மாநகராட்சி ஆணையர் பாலச்சந்திரனை நேரில் சந்தித்து புகார் மனு



பெருங்களத்தூர், ஜூலை.24-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பெருங்களத்தூர் மற்றும் பீர்க்கன்காரணை பகுதிகளில், முறையான அனுமதியுடன் கட்டப்பட்டு வரும் கட்டிடங்களுக்கு எதிராகச் சில அதிகாரிகள் செயல்படுவதாகக் கூறி, அப்பகுதி பொதுமக்கள் மற்றும் குடியிருப்பு நல சங்கத்தினர் தாம்பரம் மாநகராட்சி ஆணையர் பாலச்சந்திரனை நேரில் சந்தித்து புகார் அளித்துள்ளனர்பின்ன இது குறித்து பெருங்களத்தூர் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினர் அப்போது அவர்கள் கூறுகையில், தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பெருங்களத்தூர் பகுதிகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். ஆனால், இப்பகுதியில் உள்ள சுமார் 60 பேருக்கு மட்டும், அடையாளம் தெரியாத நபர்கள் சிலர் மொட்டை பெட்டிஷன் பெயரில் வருவாய்த்துறை, காவல் துறை மற்றும் உணவுப் பாதுகாப்புத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் பெயரில் கடிதங்களை அனுப்பி வருகின்றனர். மேலும் முதல்வர் தனிப்பிரிவு மூலம் புகார் வந்திருப்பதாகக் கூறி, ஆணையர் அலுவலகத்திலிருந்து கடிதம் அனுப்பி விசாரணைக்கு உட்படுத்துவதுடன், மாநகராட்சி அதிகாரிகள் கட்டிடத்தை இடித்து விடுவோம் என்று கூறி பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளைத் தொடர்ந்து அச்சுறுத்தி வருகின்றனர். மாநகராட்சி அலுவலகம் அருகிலேயே இருக்கும்போது, குறிப்பிட்ட சில நபர்களுக்கு மட்டும் தொடர்ச்சியாக இதுபோன்று நோட்டீஸ் அனுப்புவது ஏன்? என்று அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும் பேசிய அவர்,இப்பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான ஏரிகள் மற்றும் பல ஏக்கர் நிலங்கள் நீர்நிலைகள் ஆக்கிரமிப்பில் உள்ளன. பட்டா நிலத்தில் விதி முறைகளின்படி தொழில் செய்பவர்களையும், புதிதாகக் கட்டப்படும் கட்டிடங்களையும் குறிவைத்து மட்டுமே கடிதம் மூலம் அச்சுறுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெருங்களத்தூர் மற்றும் பீர்க்கன்காரணை பகுதிகளில் 3000க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ள நிலையில், குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டும் நோட்டீஸ் வழங்குவதை மாநகராட்சி ஆணையர் கவனத்தில் கொள்ள வேண்டும். இப்பகுதி மக்கள் நகராட்சிப் பேரூராட்சியாக இருந்தபோதிலிருந்தே முறையாக சொத்து வரி செலுத்தி வருகின்றனர். போலி மனுக்கள் ( மூலம் பொதுமக்களை அச்சுறுத்தும் நபர்கள் மீது உரிய விசாரணை நடத்தி, இது போன்ற கடிதங்கள் அனுப்புவதை உடனடியாக நிறுத்த வேண்டும். தவறும் பட்சத்தில், விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ள 3000க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் மற்றும் நீர்நிலை ஆக்கிரமிப்புகள் மீது சமமான முறையில் அதிரடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்



## சிறப்பு மனு முகாம் மூலம் பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது துரித நடவடிக்கை எடுத்து வரும் தேனி மாவட்ட காவல்துறையினர்

தேனி, ஜூலை.24-

தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர்K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் காவல் அதிகாரிகள் சிறப்பு மனு முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது உரிய விசாரணை செய்து துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.சிறப்பு மனு முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுத்து வரும் தேனி மாவட்ட காவல்துறையினரின் செயல் பொதுமக்கள் மத்தியில் காவல்துறை நண்பனாகவும், நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருப்பதாக பொதுமக்கள் தங்கள் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து வருகின்றனர்.

## தேனி மாவட்ட அளவிலான குழு அமைத்து தணிக்கை மேற்கொள்வது தொடர்பாக நடைபெற்ற முகாம்

தேனி, ஜூலை.24-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 18 வயதுக்கு குறைவான மாற்றுத்திறனாளிகளுக்கு வயது வரம்பினைத் தளர்வு செய்ய மாவட்ட அளவிலான குழு அமைத்து தணிக்கை மேற்கொள்வது தொடர்பாக நடைபெற்ற முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா. வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டார். மாற்றுத்திறனாளிகள் ஒவ்வொருவரின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசின் சார்பில் மாற்றுத்திறனாளி உதவித்தொகை, உதவி உபகரணங்கள், செயற்கை அவையங்கள் உள்ளிட்ட பல்வேறுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்ஒருபகுதியாக மாற்றுத்திற



னாளிகளுக்கான மாதாந்திர உதவித் தொகை ரூ.1500/ பெறுவதற்கு இசேவை மையத்தின் மூலம் விண்ணப்பித்த மாற்றுத்திறனாளி மாணவர்களில் 18 வயதுக்கு குறைவான மாற்றத்திறனாளிகளுக்கு வயது வரம்பினைத் தளர்வு செய்யும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைவராகக் கொண்டும், எலும்பியல், நரம்பியல், கண் மற்றும் மனநல மருத்துவர்களை உறுப்பினராகக் கொண்டும் மாவட்ட அளவிலான குழு செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட மாவட்ட அளவிலான குழுவில் உள்ள மருத்துவர்கள் மூலம் முகாமில் கலந்துகொண்ட மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு உரிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, தகுதியான மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை கிடைத்திடும் வகையில் பரிந்துரை செய்யப்பட்டது.

மேலும், இம்முகாமில் கலந்துகொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கு அரசின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன், உரிய முறையில் விண்ணப்பித்து பயன்பெறுமாறு சம்பந்தப்பட்டத் துறை அலுவலர்கள் மூலமாக அறிவுறுத்தப்பட்டதுஇன்று நடைபெற்ற இம்முகாமில் சுமார் 25க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இம்முகாமில் தனித்துணை ஆட்சியர் கவிதா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கமலராஜன், இளநிலை மறுவாழ்வு அலுவலர் திருமதி ஹேமலதா மற்றும் மருத்துவர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## செங்குன்றம் அண்ணா பேருந்து நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம்

மாதவரம், ஜூலை.24-

மாதவரம் தொகுதி செங்குன்றம் அண்ணா பேருந்து நிலையம் அருகே மாணவர்களின் எதிர்காலத்தைப் பற்றிய அக்கறையின்றி நீட் தேர்வின் மூலம் மாணவர்களின் கனவுகளையும் எதிர்காலத்தையும் சிதைக்க நினைக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்தும், நீட் தேர்வு தாள் கசிவுக்கு எதிராக அகிம்சை வழியில் போராடிய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை கைது செய்ததைக் கண்டித்தும் ஒன்றிய கல்வி அமைச்சர் பதவி விலகக் கோரியும் கண்டன ஆர்ப்பாட்டம் திருவள்ளூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் சார்பில் மாவட்டத் தலைவர் காங்கை குமார் தலைமையில் நடைபெற்றது. செங்குன்றம் நகரத் தலைவர் ராஜீவ்காந்தி, வட்டப் பொறுப்பாளர் பயாஸ்உசேன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் அருணாச்சலம், பொன்ரவி, தரணிபாய், சாந்தகுமார், முன்னாள் மாவட்டத் தலைவர்கள் ரமேஷ், தாஸ், மாமன்ற உறுப்பினர் சங்கீதா பாபு, வட்டார தலைவர்கள் நித்தியானந்தம், சங்கர், சந்திரசேகர்,






ரஜினி, வேல்முருகன், மணிகண்டன், பொன்ராஜ், மதுசூதனராவ், நகர தலைவர்கள் இமயவரம்பன், சேதுபதிஎம்பெருமான்,விஷ்வநாதன், மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் அன்பழகன், சிவக்குமார், முத்துசாமி, மாதவரம் லோகநாதன், மாரியப்பன், புழல் குபேந்திரன், மாத்தூர் வெங்கடேசன், கலையரசன், தியாகி அச்சுதன், அன்பு பிரபு, டாக்டர் ராபர்ட் கென்னடி, புழல் நவாஸ், கோட்டூர் உதயா, மாரி, சந்தோஷ், ஆனந்தன், பாஸ்கர், நாகராஜ், மாரி, சரவணன், திருமலை, அன்பு, வின்சென்ட், சாமுவேல், சுகுமார் பாபு, தாயுமாணவன், மகளிர் நிர்வாகிகள் தீபிகா, பிரியபாரதி, இலக்கியா, உள்ளிட்ட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கந்துகொண்டனர்.பின்னர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பாஜக அரசைக் கண்டித்தும், பிரதமர் மோடியைக் கண்டித்தும் கோஷங்கள் எழுப்பி உருவபொம்மை எரிக்க முயற்சிக்கும் பொழுது காவல்துறை தடுத்து நிறுத்தியதால் சாலை மறியல் போராட்டத்தில் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் ஈடுபட்டனர். சாலை மறியலில் கலந்து கொண்ட 100க்கும் மேற்பட்ட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகளை காவல்துறையினர் கைது செய்து செங்குன்றம் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அடைத்து வைத்து மாலையில் விடுவித்தனர்.

## கிருஷ்ணகிரி அகில இந்திய மாங்கனி கண்காட்சியில்மாங்கனி சமையல் போட்டிநாளை நடக்கிறது

கிருஷ்ணகிரி, ஜூலை.24-

கிருஷ்ணகிரியில் நடந்து வரும் அகில இந்திய மாங்கனி கண்காட்சியில் மாங்கனி சமையல் போட்டி வருகிற 25ம் தேதி, நாளை நடக்கிறது.இது குறித்து மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரி மைதானத்தில் கடந்த 10ம் தேதி முதல் 32வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி தொடங்கி வெகு விமர்சையாக நடந்து வருகிறது. அதனைத் தொடர்ந்து மாம்பழங்களின் மதிப்பு கூட்டல் பற்றி “மா” விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் அறியும்



வகையில், விழிப்புணர்வு ஏற்படுத்திட மாங்கனி கண்காட்சி மைதானத்தில் மாங்கனியினை அடிப்படை பொருளாக கொண்டு இனிப்பு, காரம், பானம், சிற்றுண்டி போன்ற உணவு வகைகளை தயார் செய்யும் சமையல் போட்டி வருகிற 25ம் தேதி (சனிக் கிழமை) பிற்பகல் 1 மணியளவில் நடைபெறவுள்ளதால், விருப்பமுள்ள பொதுமக்கள் தங்களின் பெயரினை பதிவு செய்து, போட்டியில் கலந்துகொண்டு தங்களின் தனித்துவமான சமையல் திறமையை வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். உணவின் சுவையினை மதிப்பிட்டு போட்டியாளர்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சிறப்பு பரிசு வழங்கப்படும். மேலும், உணவு தயாரிக்க தேவைப்படும் அடிப்படைப் பொருட்களை (அடுப்பு, கொள்கலன், சமையற் பொருட்கள்) தாங்களே எடுத்து வர வேண்டும். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் படைவீரர் மையத்தில்காலியாக உள்ள கட்டடங்கள் மாதாந்திர வாடகைக்கு விடப்படும் கலெக்டர் தகவல்

கிருஷ்ணகிரி, ஜூலை.24-

கிருஷ்ணகிரியில் உள்ள முன்னாள் படைவீரர் மையத்தில் காலியாக உள்ள கட்டடங்கள் மாதாந்திர வாடகைக்கு விடப்படும் என கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி 5 ரோடு ரவுண்டானா அருகில், பெங்களூர் சாலையில் அமைத்திருக்கும் முன்னாள் படைவீரர் மையத்தில், தரைத்தளம் 6001 சதுர அடிகள் மற்றும் முதல் தளம் 2881 சதுர அடிகள் கொண்ட கட்டடங்கள் காலியாக உள்ளன. இக்கட்டட அமைப்பானது அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் செயல்படுவதற்க உகந்த இடமாகும். இக்கட்டடத்திற்கு வாடகை பொதுப்பணித்துறையினரால் நிர்ணயிக்கப்படும் வாடகை ஆகும்.எனவே, மேற்படி காலியாக உள்ள கட்டடத்தில் மத்திய, மாநில அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் மாதாந்திர வாடகைக்கு உரிய ஒப்பந்த அடிப்படையில் உரிம கட்டணத்திற்கு விடப்பட உள்ளன. மேலும், இக்கட்டடங்கள் குறித்து கூடுதல் விவரங்கள் அறிய துணை இயக்குநர், முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை நேரிலோ அல்லது 04343-236134 என்ற எண்ணையோ தொடர்பு கொண்டு பயனடையலாம். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.



■ நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சி, மத்திய பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.





## தூத்துக்குடி காவல் மரணம் : காவல்துறைக்கு உதயநிதி ஸ்டாலின் கண்டனம்

சென்னை, ஜூலை.24-

தூத்துக்குடி காவல் மரணம் தொடர்பாக காவல்துறைக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். முதல்வர் மௌனம் காப்பதால் இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. சினிமா பார்த்து கண்ணீர் வடிக்கும் ஆட்சியாளர்கள் என்ன பதில் வைத்து இருக்கிறார்கள். போலீஸ் இழைத்த அநீதியை அருணாச்சலமே எடுத்துச் சொன்னதை பார்த்து நெஞ்சம் கலங்குகிறது என்று உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்

## நீலகிரி மாவட்டம் குன்னூர் பெட்போர்டு வியாபாரிகள் சங்கத்தின் அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது

நீலகிரி, ஜூலை.24-

நீலகிரி மாவட்டம் குன்னூர் பெட்போர்ட் பகுதியில் உள்ள வியாபாரிகள் நல சங்கம் கடந்த மூன்று ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது இதில் வியாபாரிகள் சங்க உறுப்பினர்களுக்கு புதிய அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக காவல் துறை ஆய்வாளர் கதிர்வேல் கலந்துகொண்டு அனைத்து வியாபாரிகளுக்கும் புதிய அடையாள அட்டையை வழங்கினார் மேலும் நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றிய வியாபாரிகள் சங்கத் தலைவர் கூறுகையில் தற்போது குன்னூர் பெட்ரோல் பகுதியில் செயல்பட்டு வரும் வியாபாரிகள் நல சங்கம் ஜாதி மதம், இனம் சார்ந்தது கிடையாது அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு கொண்டிருக்கிறோம் மேலும் வியாபாரிகள் தனி ஒருவராக





செயல்படுவது கடினம் வியாபாரிகள் சங்கத்தின் மூலம் செயல்படுவதால் அவர்களது தேவை பூர்த்தி செய்யப்படுகிறது மேலும் சுகாதாரத்துறை அதிகாரிகள் பிளாஸ்டிக் பொருட்கள் ஆய்வு செய்ய திடீரென கடைகளில் உள்ளே சென்று பொருட்களை சேதப்படுத்துகின்றனர் மேலும் எதற்காக குன்னூர் தனியார் அரங்கில் அரசு சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் ஆய்வு கூட்டம் நடத்தினோம் இதனால் பிளாஸ்டிக் பொருட்கள் குன்னூர் பகுதியில் விற்பனை செய்வதை தவிர்த்து உள்ளனர் என அவர் தெரிவித்தார் படம் குன்னூர் பெட்போர்ட் வியாபாரிகள் சங்க புதிய அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சியில் காவல்துறை ஆய்வாளர் கலந்து கொண்டு அடையாள அட்டைகளை வழங்கினார்

## அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை அரசு பள்ளிகளுக்கு தளவாடப் பொருள்கள் வழங்கும் நிகழ்ச்சி

மாதவரம், ஜூலை.24-

மாதவரம் தொகுதி செங்குன்றம் அருகே உள்ள பெருந்தலைவர் காமராஜர் திருமண மாளிகையில் ரெட்ஹில்ஸ் வட்டார நாடார் ஐக்கிய சங்கம் சார்பில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் கர்மவீரர் காமராஜரின் 124வது பிறந்த நாளை முன்னிட்டு அரசு பள்ளியில் பயின்று 10ம் மற்றும் +2 ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் நிகழ்ச்சியும், சென்னை அரவிந்த் கண் மருத்துவமனை, திருவள்ளூர் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கமும் இணைந்து இலவச கண் பரிசோதனை, கண் புரை அறுவை சிகிச்சை




தேர்வு முகாமும் சங்கத் தலைவர் பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.ஆலோசகர் குணபாண்டியன், செயலாளர் சீனிவாசன், பொருளாளர் பழனிச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி தலைவர் தமிழரசிகுமார், பொன்னேரி கல்வி மாவட்ட கல்வி அலுவலர் (பொறுப்பு) அய்யப்பன், ஓய்வு தலைமை ஆசிரியர் ஜான்சன் கென்னடி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு 15க்கும் மேற்பட்ட அரசு பள்ளி மாணவமாணவிகளுக்கு ரூ. 3,60,000 கல்வி ஊக்கத் தொகையையும், ரூ. 4,00,000 மதிப்பீட்டில் அரசு பள்ளிகளுக்கு 36 சிசிடிவி கேமரா, டிவிஆர் உள்ளிட்ட செட்களும், ஆம்ளிபயர், மைக், ஸ்பீக்கர் செட்களும், டெஸ்க் செட்கள், ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கு சேர், டேபிள், 45க்கும் மேற்பட்ட மின்விசிறி,ஆசிரியர்கள் டேபிள் உள்ளிட்டவைகளை வழங்கி சிறப்புரையாற்றினர்.இந்நிகழ்ச்சியில் சங்கத் துணைத் தலைவர்கள் டபிள்யூ.ஹேமில்டன், செல்வம், கண்ணன், துணைச் செயலாளர்கள் கணேஷ் பாலாஜி, பூபதி, முனிரத்தினம், செயற்குழு உறுப்பினர்கள் சண்முகராஜ், கேசவன், முருகன், சேகர், ரத்னகுமார், லிங்கேஸ்வரன், லிங்கேஸ்வரன், மணிராஜ், கனகராஜ், ரத்தினபாண்டியன், குருசாமி, ஜான்சன் கென்னடி, ஆர்த்திராஜா, சிவக்குமார், சிவக்குமார், சண்முகசுந்தரம், குமரன், நாராயணன், கணக்கு தணிக்கையாளர் செந்தில்குமார், சட்ட ஆலோசகர்கள் சண்முகசுந்தர பெருமாள், கிரிஸ்பின் ராஜ் உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள், பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், பெற்றோர்கள், திரளாக கலந்துகொண்டனர்.



■ டெல்லியில் நீட் தேர்வு ரத்து செய்யக்கோரி போராடிய மாணவர்கள் மீது தாக்குதல்கள் நடத்தியதை கண்டித்து மதுரை சட்டக் கல்லூரியில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




# நுண்ணிய கொசுக்கள் தொல்லை நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி குன்னூர் அருகே கடையடைப்பு

நீலகிரி, ஜூலை.24-

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக நுண்ணிய கொசுக்கள் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இந்நிலையில் குன்னூர் அருகே உள்ள சேலாஸ் மற்றும் சுற்றுவட்டார பகுதியில் கொசுக்கள் தொல்லை 24 மணி நேரமும் இருப்பதால் ஹோட்டல்கள் மற்றும் டீக்கடைகளில் உணவுப் பொருட்களை பரிமாற முடியவில்லை. மேலும் வீடுகளு க்குள்ளும் உணவு சாப்பிட இயலாத நிலையில் மக்கள் பெரும் அவதிப்பட்டு வருவதால் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுகாதாரத்துறை பேரூராட்சி அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி புதன்கிழமை அன்று காலை முதல் மதியம் 12 மணி வரை கடைகளை அடைத்தும் உள்ளூர் மற்றும் சுற்றுலா வாகனங்களை நிறுத்தியும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பரபரப்பாக காணப்படும் சேலாஸ் பஜார் பகுதி வெறிச்சோடி காணப்பட்டது.



# தேனியில் முன்னாள்படைவீரர் நலத்துறையின் சார்பில் முன்னாள் படைவீரர்களுக்கான தொழில் முனைவோர் கருத்தரங்கம்

தேனி, ஜூலை.24-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் முன்னாள்படைவீரர் நலத்துறையின் சார்பில் முன்னாள் படைவீரர்களுக்கான தொழில் முனைவோர் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநான், தலைமையேற்று தொழில் முனைவோருக்கான கருத்தரங்கினை துவக்கி வைத்து பேசுகையில், முன்னாள் படைவீரர்கள் பணிக்காலத்தை முடித்து சொந்த ஊருக்கு வந்து வேலைவாய்ப்பைப் பெற காத்திருக்கும் நிலை ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் ஒவ்வொருவரும் தொழில் முனைவோர்களாக திகழ்ந்தால் தாங்கள் மட்டுமின்றி பிறருக்கும் வேலைவாய்ப்பை வழங்கும் சூழ்நிலையையும் உருவாக்கலாம். அந்த வகையில் இந்த கருத்தரங்கம் பயனுள்ளதாக அமைவது உங்கள் கையில்தான் உள்ளது. இங்கு வருகைதந்துள்ள ஒவ்வொருவரும் மற்ற முன்னாள் படை வீரர்களுக்கும், குடும்பத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையிலான தூதுவராக திகழ்ந்திட வேண்டும். இன்றைய சூழ்நிலையில் இராணுவத்தில் பணிபுரிந்து பணிக்காலம் முடிந்து சொந்த இடங்களுக்கு வரும் அனைவருக்கும் ஒரே நேரத்தில் பணி கிடைக்கும் என்பதை உறுதி செய்ய முடியாது, அதிலிருந்து நாம் எந்த வகையில் முன்னேற்றம் காண முடியும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். அதற்காக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர்கள் சுய தொழில் உருவாக்கிக் கொள்ளும் வகையில் மாவட்ட தொழில் மையம், தாட்கோ மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி ஆகியவை ஒருங்கிணைந்து தொழிற்பயிற்சியுடன் கூடிய வங்கிக் கடனுதவி வழங்க திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. அந்தவகையில், நீங்கள் உங்கள் பகுதியில் மக்களின் தேவைகளை உணர்ந்து, உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு ஏற்ற தொழில் நிறுவனங்களை தேர்வு செய்து அதற்குரிய பயிற்சியைப் பெற்று மானியத்துடன் கூடிய கடனுதவிகள் பெற்று தொழில் முனைவோர்களாக திகழ்ந்திட வேண்டும். இதில் நீங்கள் பயன்பெறுவது மட்டுமின்றி பிறருக்கும் வேலைவாய்ப்பை வழங்க முடியும். நீங்கள் செயல்படக்கூடிய ஒவ்வொரு முயற்சிக்கும் மாவட்ட நிர்வாகம் என்றும் உறுதுணையாக இருக்கும். உங்களுடைய ஒவ்வொருவரின் வெற்றியும் மற்ற மாவட்டங்களில் உள்ள முன்னாள் படைவீரர்களுக்கு ஊன்றுகோலாகத் திகழ வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநான், தெரிவித்தார். இக்கூட்டத்தில் முன்னாள் படைவீரர் நலத்துறை உதவி இயக்குநர் தினேஷ், பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) முகமது, முன்னோடி வங்கி மேலாளர் நேதாஜி, கனரா வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர். ஆனந்த், உதவி மேலாளர் (தாட்கோ).ஜான்பால், முன்னாள் படை வீரர் நலத்துறை கண்காணிப்பு அலுவலர் இளையராஜா உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மரைக்காயர் பிரியாணி வணிக உரிமம் நூதன மோசடி: முதலீட்டாளர்கள் ஏமாற்றம்நீங்க எதுவும் செய்ய வேண்டாம், நாங்களே தந்துவிடுவோம் லாபத்தில் 10%

மதுரை, ஜூலை.24-

விருதுநகர் மாவட்டத்தில் பிரியாணி கடை கிளைகள் (Franchise) அமைத்துத் தருவதாகக் கூறி, தமிழகம் முழுவதும் சுமார் 240 பேரிடம் கோடிக்கணக்கில் பணம் பெற்று மோசடி செய்யப்பட்டுள்ளது,. ராஜபாளையத்தைச் சேர்ந்த கங்காதரன், சண்முகசுந்தரம், பிரகாஷ், மரிய தேவதாஸ் உள்ளிட்ட நபர்கள் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். முதலீட்டாளர்களிடம் ஒப்பந்தம் போடும்போது, "நீங்க எதுவும் செய்ய வேண்டாம், நாங்களே பிரியாணி சமைத்துத் தந்துவிடுவோம்; லாபத்தில் 10% பங்கு தருவோம். கடையின் வாடகை உள்ளிட்ட இதர செலவுகளையும் நாங்களே



ஏற்றுக்கொள்வோம் என்று ஆசை வார்த்தை கூறியுள்ளனர்,. ஒரு பிரான்சிஸ் கிளைக்கு சுமார் 5 லட்சம் முதல் 15 லட்சம் ரூபாய் வரை வசூலிக்கப்பட்டுள்ளது. இதில் 18,000 ரூபாய் முதல் லட்சக்கணக்கில் முதலீடு செய்தவர்கள் உள்ளனர். வேலூரில் மட்டும் ஒரு கிளையைத் தொடங்கிவிட்டு, அதை மற்றவர்களுக்குக் காட்டி நம்பிக்கையை வரவழைத்து பலரிடம் பணத்தைச் சேர்த் துள்ளனர். அதன் பிறகு எந்தக் கிளையையும் திறக்காமல் அந்த ஒரு கிளையையும் மூடிவிட்டனர்,. இந்த வழக்குத் தொடர்பான விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. வழக்கின் முக்கியக் குற்றவாளிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததால், நீதிபதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்,. நாளை குற்றவாளிகள் அனைவரும் கண்டிப்பாக ஆஜராக வேண்டும், இல்லையெனில் வாரண்ட் பிறப்பிக்கப்படும்" என்று நீதிபதி உத்தரவிட்டுள்ளார்,.மேலும், உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட குறைந்தபட்ச தொகையான 12 லட்சத்தைக் கூட கட்டவில்லை என்றால், பிணையை (நிணீவீற்) ரத்து செய்ய நேரிடும் என்றும் எச்சரித்துள்ளார்.சுமார் ஒன்றரை ஆண்டுகள் ஆகியும் இதுவரை ஒரு ரூபாய் கூட மீட்கப்படவில்லை என்று பாதிக்கப் பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். பணப் பரிமாற்றங்கள் அனைத்தும் ஆன்லைன் மூலமாகவே நடந்துள்ளதால், காவல்துறை விரைந்து நடவடிக்கை எடுத்து பணத்தை மீட்டுத் தர வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த வழக்கில் காவல்துறையினர் மெத்தனம் காட்டுவதாகவும், உரிய நடவடிக்கை எடுத்துத் தங்களுக்கு நீதி பெற்றுத் தர வேண்டும் என்றும் முதலீட்டாளர்கள் கண்ணீர் மல்கத் தெரிவித்துள்ளனர்,.இந்த மோசடி தொடர்பாக விருதுநகர் பொருளாதாரக் குற்றப்பிரிவில் 140க்கும் மேற்பட்டோர் புகார் அளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# குரோம்பேட்டையில் வெற்றி திரையரங்க வளாகங்கள் பிரம்மாண்ட பேனர்கள், கட்அவுட்டுகள் மற்றும் விஜய்யின் புகழ்பாடும் பாடல்களால் திருவிழா போலக் காட்சியளிக்கின்றன

குரோம்பேட்டை, ஜூலை.24-

பல மாத கால தணிக்கைப் போராட்டங்கள் மற்றும் பல்வேறு எதிர் பார்ப்புகளுக்குப் பிறகு, தமிழக முதலமைச்சர் மற்றும் நடிகர் விஜய்யின் இறுதித் திரைப்படமான 'ஜனநாயகன் இன்று காலை உலகமெங்கும் கோலாகலமாகத் திரைக்கு வந்தது இயக்குநர் எச்.வினோத் இயக்கத்தில், அனிருத் இசையில், கே.வி.என் ப்ரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் உருவாகியுள்ள இப்படம், அரசியல் மற்றும் உணர்வுப்பூர்வமான கதைக் களத்தைக் கொண்டுள்ளதாகப் படக்குழு தெரிவித்துள்ளது. இது விஜய்யின் கடைசிப் படம் என்பதால், சென்னை மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள திரையரங்குகளை ரசிகர்கள் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர். குரோம்பேட்டையில் உள்ள புகழ்பெற்ற வெற்றி திரையரங்க வளாகங்கள் அனைத்தும் பிரம்மாண்ட பேனர்கள், கட்அவுட்டுகள் மற்றும் விஜய்யின் புகழ்பாடும் பாடல்களால் திருவிழா போலக் காட்சியளிக்கின்றன. ரசிகர்கள் தாரை தப்பட்டை முழங்க, பட்டாசு வெடித்து,







நடனமாடி ஆரவாரத்துடன் படத்தைக் கண்டு களித்தனர். இதனால் குரோம்பேட்டை ஜிஎஸ்டி சாலையில் சிறிது நேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. உடனடியாகத் தலையிட்ட போக்குவரத்து போலீசார், பொது மக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் போக்குவரத்தைச் சீர் செய்தனர். இதே திரையரங்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 'கிருஷ்' (Krish Screen) திரையரங்கின் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. மனித வளத்துறை அமைச்சர் சரத்குமார், குத்துவிளக்கேற்றி இந்தப் புதிய திரையைத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் இசையமைப்பாளர் அனிருத், படத்தின் தயாரிப்பாளர் வெங்கட்ரமணன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காமாட்சி, செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் மின்னல் குமார், மாநில நிர்வாகி அறிவானந்தம், சுனிதா ரமேஷ், மற்றும் நிர்வாகிகள் குரோம்பேட்டை சங்கர் கணேஷ், செல்வம், உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர். இந்த புதிய திரையில், இருக்கையின் முதல் வரிசையில் படுத்துக் கொண்டே படம் பார்க்கும் வகையில் 10 பிரத்யேக இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தொடக்கக் காட்சியைப் பார்ப்பதற்காகத் தயாரிப்பாளர் வெங்கட் ரமணன், இசையமைப்பாளர் அனிருத் அமைச்சர் சரத் குமார் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் உள்ளிட்டோர் வருகை தந்து புதிய திரையில் படத்தைக் கண்டுகிட்டனர். இப்படம் 'ஏ' (கி) சான்றிதழ் பெற்றுள்ளதால், 18 வயதுக்குட்பட்டவர்கள் திரையரங்கிற்குள் அனுமதிக்கப்படுவதில்லை என்ற தணிக்கைக்குழுவின் விதிமுறைகளைத் திரையரங்க உரிமையாளர்கள் தீவிரமாகப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும், அரசு நிர்ணயித்த கட்டணத்தை மட்டுமே வசூலிக்க வேண்டும் என்ற கடுமையான உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன இறுதியில் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது

# வேளாங்கண்ணி திருவிழாவுக்கு சிறப்பு ரயில்கள் இயக்கம்!தென் மாவட்ட பயணிகளுக்கு தெற்கு ரயில்வே மகிழ்ச்சி அறிவிப்பு

மதுரை, ஜூலை.24=

வேளாங்கண்ணி மாதா திருவிழாவையொட்டி பயணிகளின் கூடுதல் நெரிசலை சமாளிக்கும் வகையில் எர்ணாகுளம் - வேளாங்கண்ணி- எர்ணாகுளம் இடையே வாராந்திர சிறப்பு விரைவு ரயில்களை இயக்க தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

அதன்படி, 06061 எர்ணாகுளம்- வேளாங்கண்ணி வாராந்திர சிறப்பு ரயில் ஆகஸ்ட் 27, செப்டம்பர் 3 மற்றும் 10 ஆகிய வியாழக்கிழமைகளில் மதியம் 1.00 மணிக்கு எர்ணாகுளத்தில் இருந்து புறப்பட்டு, மறுநாள் காலை 5.50 மணிக்கு வேளாங்கண்ணியை சென்றடையும். மறுமார்க்கத்தில் 06062 வேளாங்கண்ணி- எர்ணாகுளம் சிறப்பு ரயில் ஆகஸ்ட் 28, செப்டம்பர் 4 மற்றும் 11 ஆகிய வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.40 மணிக்கு வேளாங்கண்ணியில் இருந்து புறப்பட்டு, மறுநாள் காலை 11.50



மணிக்கு எர்ணாகுளத்தை சென்றடையும். இந்த சிறப்பு ரயில் கோட்டயம், திருவல்லா, கொல்லம், புனலூர், செங்கோட்டை, தென்காசி, ராஜபாளையம், சிவகாசி, விருதுநகர், அருப்புக்கோட்டை, மானாமதுரை, சிவகங்கை, காரைக்குடி, பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி, திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட முக்கிய நிலையங்களில் நின்று செல்லும்.இந்த ரயிலில் ஏசி 2டயர், ஏசி 3டயர், ஸ்லீப்பர் மற்றும் இரண்டாம் வகுப்பு பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. மாற்று த்திறன ாளிகளுக் கான வச திகளும் இடம்பெற்றுள்ளன.இந்த சிறப்பு ரயில்களுக்கான முன்பதிவு ஜூலை 24 காலை 8 மணி முதல் தொடங்கும் என தெற் கு ரயில்வே தெரிவித்துள்ளது.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161